# The Rotary Central Vidyarambam Nursery and Primary School

## Nagapattinam



**PROJECT**



**YOGA DAY**



**GROSS MOTOR**



**SCIENCE DAY**



**LIBRARY**



**SPORTS DAY**

Published in May 2020

# நிகழ்வுகள்



ஆனந்தம் அறக்கட்டளை 2019 - 2020 ம் கல்வியாண்டில் இருந்து நமது ரோட்டரி வித்யாரம்பம் பள்ளிக்கு நிதி உதவி அளிக்க முன்வந்ததோடு அதற்கான ஒப்பந்தம் அறங்காவலர்களுடன் கலந்துரையாடி முடிவு எடுக்கப்பட்டது. **ஆனந்தம் அறக்கட்டளையை சேர்ந்த திரு பாலசுப்ரமணியன் மற்றும் திருமதி லதா அவர்கள் பள்ளியின் இந்த வருடத்திற்கான முழு செலவினையும் ஏற்றுக்கொண்டதோடு கல்வி கற்பிக்க தேவையான computer, projector போன்ற பல்வேறு உதவிகளையும் பள்ளிக்கு செய்துகொடுத்து, குழந்தைகளையும் ஆசிரியர்களையும் உற்சாகப்படுத்தி வருகின்றனர்.**

13.06.2019 அன்று 2019 - 2020 ம் கல்வி ஆண்டிற்கான பள்ளி திறப்பு நடைபெற்றது.

13.06.2019 பள்ளி தாளாளர் மற்றும் வித்யாரம்பத்தின் தலைமை கணக்கர் அவர்கள் பள்ளிக்கு வருகைப் புரிந்தார்கள். அன்றே ஆனந்தம் அறக்கட்டளையைச் சேர்ந்த திரு பாலசுப்ரமணியன் மற்றும் திருமதி லதா அவர்களும் பள்ளிக்கு வருகைப்புரிந்தார்கள். அவர்களை பள்ளி தாளாளர் அவர்கள் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

மதியம் 11.00 மணியளவில் 2019-2020 ம் கல்வி ஆண்டிற்கான UKG வகுப்பு சேர்க்கை நடைப்பெற்றது. புதியதாக சேரும் மாணவர்களுக்கு ஐந்து திறன் வளர்ச்சிக்கான**(நுண் தசை வளர்ச்சி, பெருந்தசை வளர்ச்சி, மொழித்திறன் வளர்ச்சி, அறிவுத்திறன் வளர்ச்சி, கை கண் ஒருங்கிணைப்பு)** மணிக்கோர்த்தல், கயிற்றின்மேல் நடத்தல், பந்தைப்பிடித்தல், விதைகளை எண்ணுதல், பந்தைப்பிடித்தல், டயரைத் தாண்டுதல் போன்றவற்றில் தேர்வு வைக்கப்பட்டது.

**ஜுன் 14** காலை இறைவணக்க கூட்டம் நடைப்பெற்றது. இதில் வித்யாரம்பம் அறக்கட்டளையின் கணக்காளர், திருமதி மீனா மேடம் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார்கள். இதில் பள்ளியின் தாளாளர் அவர்கள் திருமதி மீனா மேடம் அவர்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்தார்கள்.





**ஜுன் 18** அன்று ஆனந்தம் அறக்கட்டளையைச் சேர்ந்த திரு பாலசுப்ரமணியன் மற்றும் திருமதி லதா அவர்களும் பள்ளிக்கு வருகைப்புரிந்தார்கள்.

**ஜுன் 18** அன்று சனிக்கிழமை காலை 11.00 மணி முதல் 12.00 மணி வரை 4 மற்றும் 5 ம் வகுப்புகளுக்கு ART & CRAFT Work மற்றும் உள் விளையாட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டு நடைப்பெற்றது. 1, 2, 3 வகுப்புகளுக்கு Activity கொடுக்கப்பட்டன.



**ஜீன் 21** அன்று **5 வது உலகயோகா தினம் கடைப்பிடிக்கப்பட்டது.** அனைத்து 5-ம் வகுப்பு மாணவர்கள் நடனமாக யோகா செய்து அசத்தினார்கள் மாலையில் சாமந்தான்பேட்டையில் உள்ள

அரசுப்பள்ளிக்குச் சென்று யோகா பற்றிய அறிய தகவல்களை கூறினர் யோகாவை நடனமாகவும் செய்தார்கள்.

நமது தி ரோட்டரி சென்ட்ரல் வித்யாரம்பம் பள்ளியில் **வன மகா உற்சவ வாரம் 01.07.2019 அன்று முதல் 05.07.2019 வரை கொண்டாடப்பட்டது.**



விழாவின் 5-ம் நாள் நாகப்பட்டினம் மாவட்ட **பசுமைப்படையின் ஒருங்கிணைப்பாளர் திரு. M. முத்தமிழ்ஆனந்தன் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட வனச்சரகர் திரு. சேகர் அவர்களும் வருகைப்புரிந்தார்கள்.** நம் பள்ளி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மரக்கன்றுகள் வழங்கினார்கள். ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் காடுகள் பற்றிய விழிப்புணர்வு நாடகம் ஒன்றையும், காடுகள் பற்றிய பாடலும், இரு கவிதைகளையும் கூறினார்கள். பிறகு 1 முதல் 4 ம் வகுப்பு மாணவர்கள் ஏற்கெனவே நிகழ்த்திய வன மகா உற்சவம் பற்றிய விழிப்புணர்வு பாடல்கள், நாடகங்கள், கவிதைகள் போன்றனவற்றை மேடையில் நிகழ்த்தினார்கள். சிறப்பு விருந்தினர்கள் மாணவர்களைப் பாராட்டி ஊக்குவித்தார்கள். இறுதியாக பள்ளியின் தோட்டத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன.



**ஜுலை 15** அன்று நமது பள்ளியில் **தலைவர் காமராஜரின் பிறந்த நாளை முன்னிட்டு கல்வி வளர்ச்சி நாள்** கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் குழந்தைகள் பல்வேறு விவாதங்கள் மற்றும் கதை கட்டுரைகள் மூலம் கல்வியின் வளர்ச்சிகளை விளக்கினர்.

**ஜுலை 17, 18** வித்யாரம்பம் பள்ளியின் தாளாளர் திருமதி பிரேமா வீரராகவன் மற்றும் வித்யாரம்பம் சிறப்பு ஆங்கில பயிற்சியாளர் திருமதி 'ஸ்ரீமதி மேடம் அவர்களும் நமது வித்யாரம்பம் பள்ளிக்கு வருகைப் புரிந்து ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயிற்சியளித்தார்கள்.



**ஜுலை 27 நமது முன்னாள் ஜனாதிபதியும் அறிவியல் அறிஞருமான Dr. APJ அப்துல்கலாம் அவர்களின் நினைவுநாள் அனுசரிக்கப்பட்டது.**

**ஜுலை 31** ஆனந்தம் அறக்கட்டளை சார்பில் சிறப்பு இரத்தவகை பரிசோதனை மையம் அமைத்து நம் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு இரத்தவகை கண்டறியப்பட்டு EMIS பதிவேற்றம் செய்யப்பட்டது.

**ஆகஸ்ட் 2** நம் பள்ளியில் பயிலும் 1 மற்றும் 5 ம் வகுப்பு மாணவர்களுக்கு அரசு சார்பில் தடுப்பூசி போடப்பட்டது.

**ஆகஸ்ட 15** 72 வது சுதந்திர தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. **நமது பள்ளி வளாகத்தில் உள்ள முதியோர் இல்லத்தில் வசிக்கும் மூத்த குடிமக்கள் தேசியக்கொடியை ஏற்றி சிறப்பித்தார்கள்.** பின்பு அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன. சுதந்திரப் போராட்ட தியாகிகளை போற்றும் விதமாக மாணவர்கள் மாறுவேடமிட்டு வந்தார்கள். சுதந்திரப் போராட்டப் பாடல்கள், வசனங்கள், பாடல்கள். நாடகங்கள் போன்றனவற்றை சிறப்பாக செய்தார்கள்.



**ஆகஸ்ட 27 வித்யாரம்பத்தின் நிறுவனரும் பள்ளியின் முன்னாள் தாளாளருமான திரு. வி. ரெங்கநாதன் அவர்களின் 81 வது பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.** பிறந்தநாளை முன்னிட்டு அனைத்து மாணவர்களுக்கும் சர்க்கரை பொங்கல் வழங்கப்பட்டது. **செயல்திட்ட நாள் கொண்டாடப்பட்டது** அருகில் உள்ள அரசுப்பள்ளி மாணவர்கள் வருகைப்புரிந்து பார்வையிட்டார்கள். அவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. செயல்திட்டத்தை செயல்படுத்திய நம் பள்ளி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.



**செப்டம்பர் 5 ஆசிரியர் தினம் அன்று வித்யாரம்பம் பள்ளியின் அளைத்து ஆசியர்களுக்கும் ஊழியர்களுக்கும் ஆனந்தம் அறக்கட்டளை சார்பில் இனிப்புகள் வழங்கப்பட்டன.** இறைவணக்க கூட்டத்தில் **முன்னாள் ஜனாதிபதி Dr. சர்வப்பள்ளி இராதாகிருஷ்ணன்** அவர்களைப் பற்றியும் ஏன் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது என்பதற்கான விளக்கமும் கொடுக்கப்பட்டது. மாணவர்கள் அவர்களின் அக்காக்களிடம் ஆசிர்வாதங்கள் வாங்கிக் கொண்டார்கள்.



**செப்டம்பர் 12, 13** வித்யாரம்பம் பள்ளியின் தாளாளர் திருமதி பிரேமா வீரராகவன் மற்றும் வித்யாரம்பம் சென்னை ஒருங்கிணைப்பாளர் திருமதி ஆனந்தி மேடம் அவர்களும் நமது வித்யாரம்பம் பள்ளிக்கு வருகைப் புரிந்தார்கள்.

**செப்டம்பர் 16** அன்று முதல் பருவத்தேர்வு ஆரம்பமானது.

**செப்டம்பர் 23** அன்று முதல் பருவத்தேர்வு முடிந்து 9 நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டது.

**அக்டோபர் 3** அன்று முதல் பருவத்தேர்வு விடுமுறை முடிந்து பள்ளி திறப்பு. மகாத்மா காந்திஜி பற்றிய தகவல்களை நம் பள்ளி மாணவர்கள் நாடகமாக அரங்கேற்றினார்கள். காமராஜர் நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது.

**அக்டோபர் 9** அன்று **விஜயதசமி கொண்டாடப்பட்டது.** மாணவர்களுக்கு சுண்டல் வழங்கப்பட்டது. அன்றைய தினமே பள்ளியின் தாளாளர், சீர்காழி ஒருங்கிணைப்பாளர் திருமதி ராதிகா, திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி ரோசி மரியாள் அவர்களும் நமது வித்யாரம்பம் பள்ளிக்கு வருகைப்புரிந்து ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இரண்டாம் பருவ பயிற்சி அளித்தார்கள். அக்டோபர் 9,10,11 மூன்று நாட்கள் இரண்டாம் பருவ பயிற்சி நடைபெற்றது.

**அக்டோபர்** 12 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் **சிறந்த பள்ளியாக நமது ரோட்டரி வித்யாரம்பம் பள்ளி தேர்வு செய்யப்பட்டு அதற்கான விருதினை தலைமை ஆசிரியை திருமதி. S. கார்த்திகா அவர்கள் முதன்மை கல்வி அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொண்டார்.** மேலும் மாவட்ட அளவில் **சிறப்பாசிரியர் விருதினை நம்பள்ளியை சேர்ந்த ஆசிரியர்கள் திருமதி. சங்கவி** மற்றும் **செல்வி. கஸ்தூரி** அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.



**அக்டோபர் 11** அன்று காலை இறைவணக்க கூட்டத்தில் திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி ரோசி மரியாள் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி சிறப்பித்தர்கள்.

அன்றைய தினம் நம் பள்ளி மாணவர்கள் அருகிலுள்ள சாமந்தான்பேட்டை அரசு **நடுநிலைப்பள்ளிக்கு சென்று மகாத்மா காந்திஜி பற்றிய தகவல்களை நாடகமாக அரங்கேற்றி சிறப்பித்தார்கள்.**



**அக்டோபர் 14** அன்று நமது பள்ளியில் **சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.** இதில் காரைக்கால் விநாயகா மருத்துவமனையிலிருந்து சிறப்பு மருத்துவர்கள் வருகைப்புரிந்து மாணவர்களை பரிசோதித்து உரிய ஆலோசனைகள் வழங்கி மருந்து மாத்திரைகளும் வழங்கப்பட்டன.



**நவம்பர் 08** 5ம் வகுப்பு மாணவர்களுக்கு நெல் பற்றிய விளக்கம் கொடுத்து, நாற்று பள்ளியின் தோட்டத்தில் நடப்பட்டது.



**நவம்பர் 14** அன்று **குழந்தைகள் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது.** காலையில் செயல்திட்டம் செய்து அருகிலிருக்கும் சாமந்தான்பேட்டை அரசுப்பள்ளி மாணவர்கள் வந்து பார்வையிட்டார்கள். அவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. மாலையில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இதில் மாணவர்கள் நேருவைப் பற்றிய பொன்மொழிகள், கவிதைகள், பாடல்கள், நாடகங்கள் போன்றனவற்றை சிறப்பாக செய்தனர். சிறப்பு விருந்தினராக ஆனந்தம் அறக்கட்டளையைச் சார்ந்த திரு. பாலசுப்ரமணியன் மற்றும் திருமதி.லதா அவர்கள் கலந்துக்கொண்டு விழாவினைச் சிறப்பித்தார்கள்.

**நவம்பர் 21** வித்யாரம்பம் பள்ளியின் தாளாளர் திருமதி பிரேமா வீரராகவன் மற்றும் வித்யாரம்பம் சிறப்பு ஆங்கில பயிற்சியாளர் திருமதி ஸ்ரீமதி மேடம் அவர்களும் நமது வித்யாரம்பம் பள்ளிக்கு வருகைப் புரிந்தார்கள்.



**நவம்பர் 22** அன்று **சென்னை ராமகிருஷ்ணா மிஷன் சேர்ந்த சுவாமி ஜி பள்ளிக்கு வருகைப் புரிந்தார்கள்.** மாணவர்களுடனும், ஆசிரியர்களுடனும் கலந்துரையாடி சொற்பொழிவு ஆற்றினார்கள். பின்பு அனைத்து வகுப்புகளையும் பார்வையிட்டு பாராட்டி புகைப்படம் எடுத்துக் கொண்டார். பள்ளியின் தோட்டத்தில் மரக்கன்று நட்டார்கள். ஆசிரியர்கள் அனைவருக்கும் புத்தகம் வழங்கப்பட்டது.

**டிசம்பர் 16** அன்று இரண்டாம் பருவத் தேர்வு ஆரம்பமானது.

**டிசம்பர் 21, 22** மூன்றாம் பருவத்திற்கான பயிற்சி நடைப்பெற்றது. இதில் அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பயிற்றுனர்கள் கலந்துக்கொண்டார்கள்.





**டிசம்பர் 24** முதல் விடுமுறை விடப்பட்டது.

**ஜனவரி 06** பள்ளி மறுதிறப்பு.

**ஜனவரி 13 பள்ளியில் சமத்துவப் பொங்கல் கொண்டாடப்பட்டது.** இதில் மாணவர்களே கொண்டு வந்த அரிசி மற்றும் வெல்லம் கொண்டு பொங்கல் செய்து கொடுக்கப்பட்டது.

**ஜனவரி 20** வித்யாரம்பம் பள்ளியின் தாளாளர் திருமதி பிரேமா வீரராகவன் மற்றும் திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி ரோசி மரியாள் அவர்களும் நமது வித்யாரம்பம் பள்ளிக்கு வருகைப் புரிந்தார்கள்.



**ஜனவரி 22** அன்று **நிழல் அமைப்பைச் சார்ந்த திருமதி ஷோபா அவர்கள் பள்ளிக்கு வருகைப்புரிந்து மரம் வளர்ப்பதுப் பற்றி ஆலோசனைகள் வழங்கினார்கள்.**



**ஜனவரி 25** பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடைப்பெற்றது. இதில் 5 ம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வு வர இருப்பதால் குழந்தைகளை எப்படி தயார்படுத்துவது என கலந்து ஆலோசிக்கப்பட்டது.



**ஜனவரி 26** நாட்டின் 71 வது குடியரசு தினம் கொண்டாடப்பட்டது. இதில் **சிறப்பு விருந்தினராக நாகை சத்யா லாட்ஜ் உரிமையாளர் அவர்கள் கலந்துக்கொண்டார்.**

**ஜனவரி 31 விளையாட்டு விழா கொண்டாடப்பட்டது.** இதில் பாரம்பரிய விளையாட்டுகளான பாண்டி, பம்பரம், கோலிக்குண்டு விளையாடப்பட்டன. இதில் சீர்காழி வித்யாரம்பம் அலுவலகத்தைச் சார்ந்தவர்களும் பெற்றோர்களும் கலந்துக்கொண்டு சிறப்பித்தார்கள். பெற்றோர்களுக்கு சிறப்பு போட்டி வைக்கப்பட்டது.








**பிப்ரவரி 23 அறிவியல் தினம் கொண்டாடப்பட்டது** அன்றைய தினம் குழந்தைகள் பல்வேறு செயல் முறை பயிற்சிகளை செய்து காட்டினார்கள். அரசு பள்ளி மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டு குழந்தைகளை பாராட்டியதோடு பல்வேறு சந்தேகங்களை கேட்டு மாணவர்களை உற்சாகப்படுத்தினார்கள்.

**பிப்ரவரி 23** அறிவியல் தினம் கொண்டாடிய அன்றே நமது பள்ளியின் **முன்னாள் மாணவர்களின் கூட்டம் நடைபெற்றது.** மாணவர்கள் தங்களின் பழைய நினைவுகளை பகிர்ந்து கொண்டதோடு, இப்பள்ளியில் கற்றுக்கொண்ட பல்வேறு விஷயங்கள் எவ்வாறு தங்களின்



உயர்படிப்பிற்கு உதவியாக இருந்தது என்பதை பெருமையுடன் விளக்கி கூறினார்கள். நமது பள்ளியில் நடைபெறும் சிறப்பு வகுப்புகளில் கலந்து கொண்டு தாங்களும் குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்க ஆர்வமுடன் இருப்பதாக தெரிவித்தனர்

**ACADEMIC INTERVENTION FOR STUDENTS:**




**SKILL BUILDING FOR TEACHERS**

| | | |
|---|---|---|
| Micro teaching | - | To critically analyse a concept and raise Question |
| English Conversation Class | - | To improve communication skills |
| Term Training | - | To impart activity oriented teaching |

Compiled by:
Karthika Prabu
Kumaresan

Edited by:
Karthika subravel
(For private circulation only)


Website: www.vidyarambam.org

Phone: 044 -28152590

Email: vidyarambam@gmail.com

Vidyarambam Trust
Park View Apartments, II floor,
No: 85/94, G.N.Chetty Road,
T.Nagar, Chennai – 600 017